மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்

O.P No. 36-2023

Date 08.07.2025

Deposition of Witness P.W.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முகமது நாசிம் | தகப்பனார் பெயர்<br>கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நான் நிரூபண பிரமாண வாக்கு மூலமாக தாக்கல் செய்கிறேன். 06.07.2020 எனக்கும் 5-ஆம் எதிர்மனுதாரருக்கும் ஏற்பட்ட வாடகை ஒப்பந்தம் அசல் ம.சா.ஆ.1. 15.10.2022 தேதியிட்ட RC.No.55/2022/C2 என்ற எண்ணில் 1ஆம் எதிர்மனுதாரர் பிறப்பித்த உத்தரவு அலுவலக நகல் ம.சா.ஆ.2. 17.10.2022 தேதியிட்ட 1-ஆம் எதிர்மனுதாரர், கட்டிட அறையை பூட்டி சீல் வைத்து அந்த சாவியை 4-ஆம் எதிர்மனுதாரர் வசம் ஒப்படைக்கும் நடைமுறைகள் அலுவலக நகல் ம.சா.ஆ.3. 17.10.2022 தேதியிட்ட 2-ஆம் எதிர்மனுதாரர் தயாரித்த அசையும் சொத்துக்களின் சோதனை பட்டியலில் உள்ள பொருட்கள் நடைமுறைகள் அலுவலக நகல் ம.சா.ஆ.4. 27.11.2022 தேதியிட்ட நான் எனது முகவருக்கு வழங்கிய பவர் பத்திரம் அசல் ம.சா.ஆ.5. 28.03.2025 தேதியிட்ட எனது தாயார் அஹமது நாச்சியார் பெயருக்கு ஏற்பட்ட கிரைய உடன்படிக்கை (ஆவணம் எண் 1706/1959) சான்றிட்ட நகல் ம.சா.ஆ.6. 03.09.2018 எனது தாயார் அஹமது நாச்சியார் இறப்பு சான்றிதழ் அசல் ம.சா.ஆ.7. 11.10.2018 எனது தாயார் அஹமது நாச்சியார் அவர்களுக்கு நான் மட்டுமே வாரிசு என்பதற்கு வாரிசு சான்றிதழின் கணினி நகல் ம.சா.ஆ.8. நகராட்சி

வரி ரசீது அசல் ம.சா.ஆ.9. எனது பெயரில் இருக்கும் மின் இணைப்பு விவரங்கள் மற்றும் ரசீதுகள் கணிணி நகல் ம.சா.ஆ.10. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>1 முதல் 4 எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1706/1959 ஆவணம் என்பது கிரய உடன்படிக்கை ஆகும். சொத்து யாரிடம் இருந்து வாங்கப்பட்டது என்று தெரியவில்லை. அதன் அடிப்படையில் பட்டா எதுவும் மாற்றம் செய்யப்பட்டது ஆனால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யபடவில்லை. 5ஆம் எதிர்மனுதாரருக்கும் எனக்கும் 06.07.2020லேயே ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். இந்த சொத்தை தவிர வேறு சொத்துகளும் எனக்கு உள்ளது. அவற்றையும் மற்ற நபர்களுக்கு வாடகைக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு நான் வாடகை கொடுத்தது 22.02.2019 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட புதிய வாடகை சட்டப்பிரிவின்படி தான் என்றால் சரிதான். ஆனால் 2020ல் 5ஆம் எதிர்மனுதாரருக்கு கொடுக்கப்பட்ட வாடகை பத்திரம் அந்த சட்டத்தின்படி பதிவு செய்யபடவில்லை என்றால் சரியல்ல. 5ஆம் எதிர்மனுதாரர் அலுவலகம் பூட்டப்பட்ட பிறகு தான் எனக்கு அந்த இயக்கம் தடைசெய்யப்பட்ட இயக்கம் என்று தெரியும். அதற்கு முன்பு அந்த இயக்கம் தடைசெய்யபடாத இயக்கம் என்று தெரியாமல் வாடகை கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான். அரசால் பூட்டி சீல் வைப்பதற்கு முன்பு அந்த இடத்தில் பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். சோதனை பட்டியலில் உள்ள அந்த பொருட்களுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். நானும் என் தாயாரும் பூட்டபோட்ட அந்த இடத்தில் வசிக்கவில்லை என்றால் சரிதான். மற்ற கீழே உள்ள கடைகளுக்கு சீல் வைத்தாற்களா என்றால் இல்லை. சரியான முறைபடிதான் மாவட்ட ஆட்சியர் அந்த இடத்தை சீல் வைத்தார் என்று சொன்னால் சரியல்ல. மாடியில் உள்ள ஒரு அறைக்கு மட்டும் தான் சீல் வைக்கபட்டது என்றும் மற்றவை என் அனுபவத்தில் தான் உள்ளது என்று சொன்னால் சரிதான். பாப்புலர்

பிரண்ட் ஆப் இந்தியா தடைசெய்யப்பட்ட இயக்கம் என்று தெரிந்தே அவர்களை அந்த இடத்தில் வாடகைக்கு வைத்தேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>5ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டு கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.